**Hallo
Basel-Stadt**

Kanton Basel-Stadt

# மொழியும் உள்வாங்குதல்

உள்வாங்குதல் (ஒருங்கிணைப்பு)
ஒருங்கிணைப்பு (உள்வாங்குதல்) வசதி
மொழி
டொச்மொழி கற்றல்

# உள்வாங்குதல் (ஒருங்கிணைப்பு)

நீங்கள் Basel-Stadt மாகாணத்தில் வசிக்கிறீர்கள் என்றால், உங்களுக்கு சில உரிமைகள் உள்ளன. நீங்கள் ஆணா அல்லது பெண்ணா, நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள், எந்த மொழி பேசுகிறீர்கள், எந்த மதத்தை நம்புகிறீர்கள் அல்லது உங்களுக்கு என்ன குறைபாடு உள்ளது என்பது முக்கியமல்ல. அதே நேரத்தில், நீங்கள் சட்டத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும். மேலும் பொருளாதார ரீதியாக உங்களை நீங்கள் கவனித்துக் கொள்வதும் மற்றும் ஜெர்மன் மொழியை கற்றுக் கொள்வதும் முக்கியம். இதைப் பற்றிய தகவல்களை நீங்கள் இங்கே பெறலாம்.

## முக்கியமான அடிப்படைக் கோட்பாடு

நீங்கள் சுவிட்சர்லாந்தில் வசிக்கிறீர்கள் என்றால் நீங்கள் கூட்டாட்சி அரசியலமைப்பு மற்றும் சட்டங்களுக்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். இதன் பொருள், எடுத்துக்காட்டாக: எல்லா மக்களும் ஒருவரை ஒருவர் மதிக்க வேண்டும் எல்லா மக்களும் சமமாக நடத்தப்பட வேண்டும் யாரும் பாகுபாட்டுடன் நடத்தப்படக்கூடாது. நீங்கள் பாசிலில் வசிக்கிறீர்கள் என்றால், ஜெர்மன் மொழியைக் கற்க வேண்டும். பொருளாதார ரீதியாகவும் உங்களை நீங்கள் கவனித்துக் கவனித்துக் கொள்ள வேண்டும்.
ஆனால் அனைவரும் கலந்து கொண்டால் மட்டுமே ஒருங்கிணைப்பு செயல்படும். பாசில் மக்களும் உங்களுக்குத் திறந்த மனதுடன் இருக்க வேண்டும். அவர்கள் உங்களுக்குத் தகவல்களைத் தரவும் ஆதரிக்கவும் வேண்டும்.

## சுய பொறுப்பு

நீங்கள் புதிதாக பாசிலில் இடம் பெயர்ந்து உள்ளீர்களா? கூட்டமைப்பு, மாநிலங்கள் மற்றும் நகராட்சிகள் உங்களுக்குப் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார வாழ்க்கைக்கு நியாயமான அணுகல் இருப்பதை உறுதி செய்கிறது. ஆனால் நீங்களும் உங்களை ஒருங்கிணைத்துக் கொள்வதில் அக்கறை காட்ட வேண்டும். நீங்கள் ஒருங்கிணைப்புச் சலுகைகளைப் பயன்படுத்திக் கொள்வீர்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

## சமூக வாழ்க்கையில் பங்கெடுத்தல்

இவ்வாறாக நீங்கள் உங்களை ஒருங்கிணைக்க முடியும்: கழகங்களில் நீங்கள் புதிய நபர்களை நன்கு அறிந்து கொள்ளலாம் அல்லது உங்கள் குடியிருப்புப் பகுதியில் நடைபெறும் திருவிழாக்கள் மற்றும் நிகழ்வுகளுக்குச் செல்லுங்கள்.
ஆரம்பத்தில் இது சற்று கடினமாக இருக்கலாம். பல மற்ற நாடுகளை சேர்ந்தவர்களுக்குத் திறந்த மனதுடன் இருப்பதில்லை. ஆனால் சில காலம் கழித்து பெரும்பாலான மக்கள் தங்கள் கட்டுப்பாட்டில் இருந்து வெளியே வருகிறார்கள். இதனால் விட்டு விடாதீர்கள்.

## தகவல்கள் / உதவிகள்

நீங்கள் பாசிலுக்கு இடம்பெயர்ந்து விட்டீர்களா, உங்களுக்கு உதவி அல்லது தகவல்கள் தேவைப்படுகிறதா? Basel-Stadt இல் நீங்கள் தொடர்பு கொள்ளக்கூடிய பல்வேறு இடங்கள் உள்ளன. பாசில்-ஷ்டட் மாநிலத்தின் அலுவலகங்கள் மற்றும் நீங்கள் வசிக்கும் நகராட்சியிலிருந்து நீங்கள் தகவல்களைப் பெறலாம். ஆனால் புலம்பெயர்ந்தோருக்கான பிரத்தியேகத் தொடர்பு புள்ளிகளும் உள்ளன. சுவிட்சர்லாந்தில் வாழ்க்கை மற்றும் பிற தலைப்புகள் பற்றிய தகவல்கள்:

- GGG Migration

புகலிடச் சட்டம் மற்றும் புலம்பெயர்வோர் சட்டம் பற்றிய தகவல்கள்:

- Beratungsstelle für Asylsuchende BAS
- Freiplatzaktion

நீங்கள் இன்னும் ஜெர்மன் பேசவில்லையா? உங்களுக்காக மொழிபெயர்ப்பதற்கு ஒருவரை உங்களுடன் அழைத்துச் செல்லலாம். நீங்கள் ஒரு மொழிபெயர்ப்பாளரையும் கோரலாம்.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-baselstadt.ch/ta/language-and-integration/integration

# ஒருங்கிணைப்பு (உள்வாங்குதல்) வசதி

பள்ளியில், தொழிற்பெயர்ச்சியில் மற்றும் வேலையில் நீங்கள் சிறந்த முறையில் உங்களை ஒருங்கிணைக்க முடியும். ஆனால் உங்களுக்கு இன்னும் வேலையோ கல்வியோ இல்லை. மேலும் நீங்கள் இன்னும் பள்ளிக்கூடத்திற்கு செல்லவில்லை. எனில் நீங்கள் ஒருங்கிணைப்புக்கு பல்வேறு சலுகைகளைப் பயன்படுத்தலாம் .

## குறிப்பிட்ட வசதிகள்

பாசில் மாநிலத்திற்குப் புதிதாகக் குடியேறுபவர்களுக்குக் குறிப்பாக பல சலுகைகள் உள்ளன. எடுத்துக்காட்டாக, பேச்சுச் சுற்றுகள், ஓய்வு நேரம், விரிவுரைகள் அல்லது படிப்புகளுக்கான சலுகைகள். இந்தச் சலுகைகள் நீங்கள் மக்கள் குடியேறவும் மக்களைப் பற்றி அறிந்து கொள்ளவும் வருகின்றன. "GGG Migration" ஆலோசனை மையம் என்னென்ன சலுகைகள் உள்ளன என்பதைப் பற்றி உங்களுக்குத் தெரிவிக்கும்.

## கழகங்கள்

சுவிஸ் மக்கள் ஏதேனும் ஒரு கழகத்தில்(Verein) உறுப்பினராக உள்ளனர். விளையாட்டுக் கழகங்கள் அல்லது கலாச்சாரக் கழகங்கள் என பல்வேறு வகையான ஆர்வங்களுக்கான கழகங்கள் உள்ளன. நீங்கள் ஒரு கழகத்தில் சேர்ந்தால், மற்ற மக்களைச் சந்திக்கலாம். பெரும்பாலான கழகங்கள் அனைவருக்கும் திறந்திருக்கும்.

## இடம்பெயர்வு நிறுவனங்கள்

புலம்பெயர்ந்தோர் சங்கங்களும் உள்ளன. சங்கங்களின் உறுப்பினர்கள் பொதுவாக ஒரே மொழியைப் பேசுகிறார்கள், அவர்கள் ஒரே நாட்டைச் சேர்ந்தவர்கள் அல்லது ஒரே மதத்தைக் கொண்டவர்களாக இருக்கிறார்கள். இந்த சங்கங்கள் பெரும்பாலும் சுவிட்சர்லாந்து மற்றும் பாசல்-ஸ்டாட் மாநிலத்திற்குப் புதிதாக வருபவர்களுக்கான சலுகைகளைக் கொண்டுள்ளன. இவை ஒருங்கிணைப்பில் உங்களுக்கு உதவ முடியும்.

## இளையவர்களுக்கான வசதிகள்

இளைஞர்கள் தங்கள் ஓய்வு நேரத்தில் பல சலுகைகளைப் பயன்படுத்தலாம், இங்கு நீங்கள் உங்கள் சக வயதுடைய இளைஞர்களைச் சந்திக்கலாம். இங்கு நீங்கள் ஒரு திட்டப் பணியில் பங்கேற்கலாம் மற்றும் உங்கள் சொந்த யோசனைகளைப் பரிந்துரைக்கலாம். வல்லுநர்கள் இப்பணியில் இளைஞர்களுடன் (Jugendarbeit) இருப்பார்கள். இந்தச் சலுகைகள் பொதுவாக இலவசம்.

## சுற்றுப்புற சந்திப்பிடங்கள்

சுற்றுப்புற சந்திப்பிடங்கள் (Quartiertreffpunkte) அனைவருக்கும் திறந்திருக்கும். குடும்பங்கள், வயதானவர்கள் மற்றும் கொஞ்சம் மட்டுமே ஜெர்மன் பேசும் நபர்களுக்கும் இங்கு சலுகைகள் உள்ளன. சில சந்திப்பிடங்கள் குடும்ப மையங்களாக உள்ளன. இங்கு தாய்மார்கள் மற்றும் தந்தைகள் தங்கள் குழந்தைகளுடன் எளிதாகச் சந்திக்கலாம். சுற்றுப்புற சந்திப்பிடங்கள் உங்கள் அன்றாட வாழ்க்கையில் உங்களுக்கு ஆலோசனைகள் மற்றும் ஆதரவைத் தருகின்றது. சுற்றுப்புற சந்திப்பிடங்களில் குடும்பக்கொண்டாட்டங்கள் மற்றும் பிற சந்தர்ப்பங்களுக்கு அறைகளை நீங்கள் வாடகைக்கு எடுக்கலாம்.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-baselstadt.ch/ta/language-and-integration/integration-programmes

# மொழி

நீங்கள் Basel-Stadt சென்று விட்டீர்கள் ஆனால் இன்னும் ஜெர்மன் பேசத் தெரியவில்லையா? எனில் நீங்கள் விரைவில் ஜெர்மன் மொழியைக் கற்றுக் கொள்ளத்தான் வேண்டும். நீங்கள் ஜெர்மன் மொழியைப் பேசினால் நாட்டையும் அதன் மக்களையும் நன்கு அறிந்து கொள்வீர்கள். மேலும் நீங்கள் வேலை தேடுவதும் எளிதாக இருக்கும்.

## உயர்தனி டொச் மொழி / சுவிஸ் டொச் மொழி

சுவிட்சர்லாந்தில் நான்கு தேசிய மொழிகள் உள்ளன: டொச், பிரெஞ்ச், இத்தாலி, ரெட்ரொமானிஷ். Basel-Stadt மாநிலத்தில் ஜெர்மன் அதிகாரப்பூர்வ மொழி. உயர் டொச் மற்றும் சுவிஸ் டொச் உள்ளது.

- உயர்தனி டொச் (Standarddeutsch)
  டொச் மொழி பேசும் சுவிட்சர்லாந்தில் உள்ளவர்கள் உயர்தனி டொச் எழுதுகிறார்கள். அவர்கள் பள்ளியிலும் சில சமயங்களில் வானொலி மற்றும் தொலைக்காட்சியிலும் கூட உயர்தனி டொச் பேசுகிறார்கள்.
- சுவிஸ் டொச் (Schweizerdeutsch)
  அன்றாட வாழ்வில் மக்கள் பெரும்பாலும் சுவிஸ் டொச் பேசுகிறார்கள். நீங்கள் ஏற்கனவே நன்றாக டொச் பேசுபவராயினும், சுவிஸ் டொச் உங்களுக்குப் புரிந்து கொள்வது கடினம். ஏதாவது புரியவில்லையா? எனில் மக்களை நீங்கள் உயர்தனி டொச் மொழியைப் பேசுமாறு கேட்கத் தயங்க வேண்டாம். நீங்களும் பேச வேண்டியது இல்லை. ஆனால் சிறிது காலம் கழித்து நீங்கள் அதை புரிந்து கொள்ள வேண்டும் என்பது மிகவும் முக்கியம்.

## டொச் மொழியும் பிள்ளைகளும்

உங்கள் குழந்தை டொச் அல்லாத வேறு மொழியே பேசுகிறதா? எனில் அது கூடிய விரைவில் டொச் மொழி பேசும் குழந்தைகளை அறிந்து கொள்ள வேண்டும். உங்கள் குழந்தை கற்றுக்கொள்வதற்கு இதுவே மிக விரைவான வழியாகும். எடுத்துக்காட்டாக உங்கள் குழந்தை ஒரு விளையாட்டுக் குழுவிற்குச் செல்லலாம். பெற்றோர்கள் மற்றும் குழந்தைகளுக்குச் சிறப்பு சலுகைகளும் உள்ளன.
உங்கள் குழந்தை இன்னும் டொச் மொழி பேசவில்லையா அல்லது கொஞ்சம் டொச் மட்டுமே பேசுகிறதா? உங்கள் குழந்தை மழலையர் பள்ளிக்குச் செல்வதற்கு ஒரு வருடத்திற்கு முன்பே டொச் மொழியைக் கற்க வேண்டும். மழலையர் பள்ளிக்கு 18 மாதங்களுக்கு முன்பு இதைப்பற்றி ஒரு கடிதத்தில் உங்களுக்குத் தெரிவிப்போம். இந்த சலுகைகளும் எடுத்துக்காட்டுகள்:

- ஜெர்மன் பாடங்களைக் கொண்ட விளையாட்டுக் குழு
- பகல்நேர பராமரிப்பு மையம் (Kita), அங்கு ஜெர்மன் மொழி பேசப்படுகிறது.
- பகல்நேரக் குடும்பம்

நீங்களும் உங்கள் குழந்தைக்கு மொழி வளர்ச்சியில் உறுதுணையாக இருக்க முடியும். உங்கள் குழந்தையுடன் நிறைய பேசுங்கள், உங்கள் குழந்தை சொல்வதைக் கேளுங்கள் மற்றும் கதைகளைச் சொல்லுங்கள். உங்களுக்கு நன்றாகத் தெரிந்த மற்றும் பேச விரும்பும் மொழியில் பேசுங்கள்.

## Übersetzungen / உரையாடல் மொழிபெயர்ப்புச் சேவை (DE)

நீங்கள் பாசிலுக்குப் புதியவர் மற்றும் ஜெர்மன் இன்னும் நன்றாகப் பேச இயலவில்லையா? எனில் உங்களுக்கு யாராவது விஷயங்களை விளக்க வேண்டும். ஒரு வேளை நீங்கள் உறவினர்கள் அல்லது அறிமுகமானவர்களிடம் கேட்கலாம்.
ஆனால் சில உரையாடல்கள் கடினமானவை அல்லது மிகவும் தனிப்பட்டவை. உதாரணமாக, மருத்துவமனையில் அல்லது ஒரு அதிகாரியுடன் சந்திப்பு.எனில் நீங்கள் ஒரு கலாச்சார ரீதியான மொழிபெயர்ப்பாளரை வேண்டலாம். இவர்கள் குறிப்பாக வேறு கலாச்சாரத்திலிருந்து வருபவர்களுக்கான தொழில் வல்லுநர்கள். இந்தத் தொழில் வல்லுநர்கள் உங்கள் கலாச்சாரத்தை நன்கு அறிந்திருப்பார்கள். மேலும் நீங்கள் எல்லாவற்றையும் நன்றாகப் புரிந்து கொள்ளுமாறு அவர்களால் உங்களுக்கு விளக்க முடியும்.
உங்களுக்கு அரசு அலுவலகத்தில் இருந்து வரும் கடிதங்கள் புரியவில்லையா? அல்லது நீங்கள் ஒரு படிவத்தை நிரப்ப வேண்டுமா அல்லது எழுத வேண்டுமா? இங்கே உதவி பெறவும்:

- GGG Migration மொழிபெயர்ப்புச் சேவையிலிருந்து

## குடிவரவு மற்றும் சிவில் சட்டத்தில் மொழி நிலைகள்

ஒருவேளை நீங்கள் குடியிருப்பு அனுமதி(B) அல்லது நிலையாக வாழ அனுமதிக்கு(C) விண்ணப்பிக்க விரும்புகிறீர்கள் அல்லது நீங்கள் உள்நாட்டு குடிமையாக்கம் பெற விரும்புகிறீர்கள். உங்கள் முதன் மொழி டொச் இல்லையா?எனில், நீங்கள் நன்றாக பேசுகிறீர்கள் என்பதற்கு ஆதாரம் தேவை.
விண்ணப்பிக்க உங்களுக்கு என்னென்ன தேவை என்பது பற்றிய தகவல்களை இங்கே காணலாம்:

- இடம்பெயர்வு அலுவலகம் (Migrationsamt)

மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-baselstadt.ch/ta/language-and-integration/language

# டொச்மொழி கற்றல்

டொச் வகுப்பில் நீங்கள் டொச் மொழியை நன்றாகக் கற்றுக் கொள்ளலாம். டொச் மொழியை கற்க பல்வேறு வகுப்புகள் உள்ளன.

## வசதி வாய்ப்புக்கள்

டொச் மொழி கற்க பல்வேறு வகுப்புகள் உள்ளன, எடுத்துக்காட்டாக:

- உங்களுக்கு சிறு குழந்தைகள் இருந்தால், குழந்தை பராமரிப்புடன் கூடிய வகுப்பில் கலந்துக்கொள்ளலாம் .
- ஒருவேளை உங்களுக்கு லத்தீன் எழுத்துக்கள் இன்னும் தெரியாது அல்லது வாசிப்பதிலும் எழுதுவதிலும் உங்களுக்குச் சிக்கல் இருக்கிறது என்றால் ஒரு எழுத்தறிவு வகுப்பில் (Alphabetisierungskurs) கலந்துக்கொள்ளலாம்.

எந்தெந்த வகுப்புகள் உள்ளன மற்றும் வகுப்புகளின் விலை எவ்வளவு என்பதை இங்கே காணலாம்:

- வயது வந்தோர் கல்வித் துறை (Fachstelle Erwachsenenbildung)
- GGG Migration

## மொழியின் தரம்

ஒரு நபர் எவ்வளவு நன்றாக ஜெர்மன் பேசுகிறார் என்பதை "பொதுவான ஐரோப்பிய குறிப்புக் கட்டமைப்பு" மூலம் அளவிட முடியும். இதன் சுருக்கம் GER. GER என்பது மொழிக்கான தரநிலை. இது ஆறு நிலைகளைக் கொண்டுள்ளது: உங்களிடம் A1 அல்லது A2 நிலை இருந்தால், உங்களுக்கு ஜெர்மன் மொழி பற்றிய அடிப்படை அறிவு இருக்கும். நீங்கள் C1 அல்லது C2 நிலையை அடைந்தால், நீங்கள் நன்கு முன்னேறிவிட்டீர்கள் என்று அர்த்தம்.

- சுவிட்சர்லாந்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்கல்வியை மேற்கொள்ள விரும்புகிறீர்களா? எனில் உங்களுக்கு நிலை B1 அல்லது B2 தேவை.
- நீங்கள் ஒரு பல்கலைக்கழகத்தில் படிக்க விரும்பினால், உங்களுக்கு நிலை C1 அல்லது C2 தேவை.

## நிதி உதவி

நீங்கள் பாசிலுக்குச் சென்று விட்டீர்கள் மேலும் குடியிருப்பு அனுமதியைப் பெறுகிறீர்களா? எனில் நீங்கள் ஒரு டொச் பாடத்திற்கான பரிசு சீட்டைப் பெறுவீர்கள். நீங்கள் 80 பாடங்களை இலவசமாக இதன் மூலம் படிக்கலாம். மாநிலத்தால் அங்கீகரிக்கப்பட்ட மொழிப்பள்ளியில் நீங்கள் பரிசு சீட்டைப் பெறலாம். நீங்கள் நுழைந்த பிறகு 12 மாதங்கள் வரை இந்த பரிசுச் சீட்டு செல்லுபடியாகும்.
அதற்குப் பிறகும் நீங்கள் மேலும் வகுப்புகளில் கலந்து கொள்ள விரும்புகிறீர்களா? எனில் அதற்கு நீங்கள் பணம் செலுத்த வேண்டும். இந்த படிப்புகளின் விலையில் வேறுபடுகின்றன. எனவே விலைகளை ஒப்பிடுவது சிறந்தது. சில வகுப்புகளை Kanton Basel-Stadt ஒரு குறிப்பிட்ட தொகையுடன் ஆதரிக்கிறது. இந்த வகுப்புகளுக்கு நீங்கள் குறைவான கட்டணம் செலுத்துவீர்கள்.

மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-baselstadt.ch/ta/language-and-integration/learning-german